©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 4.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 10] சென்னை, புதன்கிழமை, மார்ச் 17, 2010
பங்குனி 3, திருவள்ளுவர் ஆண்டு–2041

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்டம் எண் 6/2010**

**1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்த சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். **குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

(2) இது, 2009–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 30/1983.** 2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 89–ஆம் பிரிவில் (1)–ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில், "எட்டு ஆண்டுகள் ஆறு மாதங்கள்" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஒன்பது ஆண்டுகள்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். **89–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2009.** 3. (1) 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றது. **நீக்கமும் காப்பும்.**

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்த சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010—ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்டம் எண் 7/2010**

**சென்னைப் பெருநகரத் திட்டப் பரப்பிடத்திற்கு ஓராண்டுக் கால அளவிற்குத் தனி வகைமுறைகளைச் செய்வதற்கும், அதனோடு தொடர்புடைய அல்லது அவற்றுக்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்குமானதொரு சட்டம்.**

தற்போது நடைமுறையில் உள்ள சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்கான முதல் பெரும் திட்டம், அதில் அடங்கியுள்ள மேம்பாட்டு கட்டுப்பாடு விதிகள் மற்றும் கட்டட விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் துணைமுறை விதிகள் ஆகியவற்றுக்கு இணங்கிய வகையில் அல்லாமல், அதிகாரமளிக்கப்படாத கட்டமைப்பு வளர்ச்சிகளுக்கு வழி கோலுகிற வகையில் சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்தில் உள்ள நிலம் மற்றும் கட்டமைப்புகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிற வகையில், தொழில்மயமாக்கல், மக்கள் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் குடிபெயர்தல் மற்றும் பல்வேறு பிற காரணங்களால் மக்கள் தொகையில் அதிவேகமான வளர்ச்சி ஏற்பட்டுவிட்டதாலும்;

மேலும், மேம்பாட்டுக்கான அனைத்துக் கூறுகளையும் ஆய்ந்து பார்க்குமாறும், 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புச் சட்டத்திற்கு (தமிழ்நாடு சட்டம் 35/1972) தேவையான மாறுதல்களைச் செய்வதற்கு ஆலோசனை வழங்குமாறும் ஓய்வுபெற்ற உச்சநீதி மன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் குழு ஒன்றை அரசானது அமைத்துருவாக்கியுள்ளதாலும்;

மேலும், மேற்சொன்ன குழுவின் பரிந்துரைகளானவை, 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புச் சட்டத்திற்குப் (தமிழ்நாடு சட்டம் 35/1972) பெருமளவிலான திருத்தங்களை உள்ளடக்கக் கூடும் என்பதோடு, அவற்றுள் சிலவற்றுக்கு, அதிலும் குறிப்பாக மேற்சொன்ன சட்டத்தின்படி தற்போதுள்ளவாறான முறையை மாற்றுகிற வகையில் வளாகங்களைக் கட்டுதல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பான வகைமுறைகளுக்கு, முன்தேதியிட்டு செயல்விளைவு கொடுக்க வேண்டியிருக்கும், என்பதாலும்;

மேலும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமமானது சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்கு, 2026—ஆம் ஆண்டினைத் தொலைநோக்கு எல்லை ஆண்டாகக் கொண்டு நகர்ப்புற வளர்ச்சியில் எழுகிற புதிய பரிமாணங்களைக் கருத்தில்கொண்டு II-ஆம் பெரும் திட்டத்தின் வரைவு ஒன்றினைத் தயாரித்து 31—08—2007 வரையிலான கால அளவினைக் கொடுத்து, பொதுமக்களிடமிருந்து மறுப்புரைகள் அல்லது ஆலோசனைகளைப் பெறுவதற்காக அது வெளியிடப்பட்டுள்ளது. II-ஆம் பெரும் திட்டத்தின் வரைவானது மக்களுடனான கலந்தாய்விற்குப் பின்னரும் அரசினால் ஆலோசனை வழங்கப்பட்டவாறான மாற்றங்களைச் செய்த பின்னரும், 2008—ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29—ஆம் நாளன்று அரசுக்கு மறுபடியும் பணிந்தனுப்பப்பட்டது; அரசானது, 2026—ஆம் ஆண்டுக்கான சென்னைப் பெருநகர் திட்டப் பரப்பிடத்திற்கான II-ஆம் பெரும் திட்டவரைவிற்கு ஏற்பளிப்பு வழங்கியுள்ளது; மற்றும் அது 2008—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2—ஆம் தேதியிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* சிறப்பிதழில் வெளியிடப்பட்டது. 2026—ஆம் ஆண்டுக்கான சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்கென ஏற்பளிக்கப்பட்ட II—ஆம் பெரும் திட்டத்தினால் ஏற்படக்கூடிய பல்வேறு விளைவுகள், இதற்கென உருவாக்கப்பட்ட ஆறு பகுதிக் குழுக்களின் பரிசீலனையில் உள்ளன;

மேலும், சென்னைப் பெருநகரப்பரப்பிடத்தில் குடிசைப் பகுதிகளை மேம்பாடு செய்வதற்காகவும், தேவைப்படும்போதெல்லாம் குடிசைப் பகுதியில் உள்ள மக்களை மறு குடியமர்வு செய்வதற்கு விரிவானதொரு கொள்கையினை உருவாக்க மாநில அரசானது கருதியுள்ளதாலும்;

பொதுத் தெருக்களில் விற்பனை செய்பவர்களின் செயற்பாட்டையும் மற்றும் கூவி விற்பவர்களின் செயற்பாட்டையும் ஒழுங்குபடுத்துவதற்கான செயல்திட்டம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் அவர்களால் செய்யப்படும் அதிகாரமற்ற கையுடைமை தொடர்பான பிரச்சனைகள் குறித்து விரிவானதொரு ஆய்வினைச் செய்யக் கருதப்பட்டுள்ளதாலும்;

மேலும், தற்போது நடைமுறையிலுள்ள சென்னைப் பெருநகர திட்டப்பரப்பிடத்திற்கான முதலாம் பெரும் திட்டத்தின் மற்றும் அதில் அடங்கியுள்ள மேம்பாட்டு கட்டுப்பாடு விதிகளின் வகைமுறைகளை மீறுவதற்கான நடவடிக்கையை, அரசினால் இந்தப் பொருட்பாடு குறித்து இறுதியான கருத்து எய்தப்படுவதற்கு முன்பாக, எடுப்பதானது சிறிய வணிகர்கள் உள்ளடங்கலான பெருமளவிலான மக்களுக்குத் தவிர்க்க இயலாத துன்பத்தையும் சரி செய்ய இயலாத இழப்பினையும் ஏற்படுத்தக் கூடும் என்பதாலும்;

மேலும், 2007–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனிவகைமுறைகள்) அவசரச் சட்டத்திற்குப் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2007) பதிலாக அமைக்கப்பட்ட 2007–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 39/2007) சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்பு எதிர்க்கப்பட்டது; மற்றும் அது சென்னை உயர்நீதிமன்றத்தின் ஈராயம் ஒன்றினால் செல்லுபடியாகாதென நீக்கப்பட்டதாலும்;

மேலும், மேற்சொன்ன தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2007, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 39/2007 ஆகியவற்றைச் செல்லுபடியாகாதென நீக்கம் செய்த, சென்னை உயர்நீதிமன்றத்தின் மேற்சொன்ன தீர்ப்பிற்கு எதிராக, இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட தனி அனுமதி மனுக்களில் உச்ச நீதிமன்றமானது, மேலும் ஆணைகள் பிறப்பிக்கப்படுவது வரையிலும், 14–12–2007 அன்று இருந்தபடியான நிலையானது பேணி வரப்படுதல் வேண்டும் எனவும் மனுதாரர்கள் அதற்கு இடையில் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான ஆணை எதனையும் பிறப்பித்தல் கூடாது எனவும் ஆணையிட்டுள்ளதாலும்;

மேலும், மேற்சொன்ன 39/2007 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் செல்லும் தன்மை குறித்த வழக்கானது இந்திய உச்ச நீதிமன்றத்தின் நிலுவையில் இருந்து வருவதாலும்; மேற்சொன்ன 39/2007–எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டமானது 2008–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 26–ஆம் நாளன்று செயல் விளைவுகொள்வது அற்றுப்போய்விட்டது என்பதாலும்; இந்திய உச்ச நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டுள்ளவாறு, உள்ளவாறான நிலையைப் பேணிவரும் பொருட்டும், 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனிவகை முறைகள்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 56/2008) அரசு இயற்றியுள்ளது; அச்சட்டமும், 2009–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27–ஆம் நாளிலிருந்து செயல்விளைவு கொள்வது அற்றுப்போகும் என்பதாலும்;

மேலும், பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து இயக்கத்திற்கான தேவைப்பாடுகளை விட்டுக்கொடுக்காமல் நீதிமன்றத் தீர்ப்புகளின் உயிர்ப்புத் தன்மையையும் அவற்றின் வாசகங்களையும் கருத்திற்கொண்டும் சரிசமமான நிலையிலும் நேரிய நிலையிலும் அமைந்த சிறிய அல்லது பெரிய இயல்பினதான மீறுகைகளைப் பொறுத்த அளவில் வகைமுறைகளைச் செய்வது தேவையானதாக இருப்பதாலும்;

மேலும், பாதுகாப்பு நடவடிக்கை ஒன்றை முழுவதுமாக உருவாக்க வணிக மற்றும் கடைகளைக் கொண்ட மையங்களில் முன்னெச்சரிக்கையாகத் தீயணைப்புப் பாதுகாப்பிற்கான நவீன தேவைப்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய, திட்டமிடும் அதிகார அமைப்பிற்குத் தக்கவாறு அதிகாரம் அளிப்பதற்கு வகைமுறைகளைச் செய்யவேண்டியிருப்பதாலும்;

மேலும், ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் அமைந்த குழுவானது, தமது அறிக்கையினை அனுப்ப இருப்பதாலும், ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதியின் அறிக்கையைப் பரிசீலனை செய்வதற்கு அரசுக்கு மேலும் காலம் தேவைப்படும் என்பதாலும் மற்றும் அதிகாரமளிக்கப்படாத கட்டடங்களுக்கு எதிராகச் செயல்முறை நடவடிக்கை எடுப்பதைத் தள்ளிவைக்கவேண்டியது உடனடித் தேவையாகியிருப்பதாலும்;

மேலும், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகை முறைகள்) சட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் தற்போது பயனுள்ள வகையில் இல்லாததாலும், 2010–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26–ஆம் நாள் வரையிலான கால அளவிற்குள்ளாக மேலும் குறிப்பிடப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் முடிவு செய்யவேண்டியிருப்பதாலும், அந்தக் கால அளவிற்கு அவ்வாறான நடவடிக்கைக்கு எதிராக சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திலுள்ள மக்களுக்குத் தற்காலிக நிவாரணம் வழங்குவதற்குச் சட்டம் ஒன்றை இயற்றுவது உகந்ததாயிருப்பதாலும்;

மேலும், சிறிய வணிகர்கள் உள்ளடங்கலான பெருமளவிலான மக்களுக்குத் தற்காலிக நிவாரணம் வழங்குவதற்கும் அவர்களுக்கு ஏற்படக்கூடிய தவிர்க்க இயலாத துன்பத்தையும் சரி செய்ய இயலாத இழப்பினையும் குறைப்பதற்கும் ஓர் ஆண்டுக் கால அளவு ஒன்றுக்குச் சட்டம் ஒன்றை இயற்றுவது உகந்ததாக இருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டமானது, 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டம் என வழங்கப்பெறும். **குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.**

(2) இது, சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்தை அளாவி நிற்கும்.

(3) இது, 2009ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) இது, இதன் தொடக்கத் தேதியிலிருந்து ஓர் ஆண்டு முடிவடைவதன் பேரில் செயல்விளைவு கொள்வது அற்றுப்போதல் வேண்டும் அவ்வாறு அற்றுப்போவதற்கு முன்பாக செய்யப்பட்ட அல்லது செய்யாமல் விடப்பட்ட செயற்பாடுகளைப் பொறுத்த வரையில் அல்லாமல் அற்றுப்போதல் வேண்டும். மற்றும் அவ்வாறு அற்றுப்போவதன் பேரில், இந்தச் சட்டமானது தமிழ்நாடு சட்டம் ஒன்றினால் நீக்கம் செய்யப்பட்டிருந்தாற்போன்றே, 1891–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுக் கூறுகள் சட்டத்தின் 8–ஆம் பிரிவானது பொருந்துதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 1/1891.

பொருள் வரையறைகள். **2.** (1) இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி.–

(*a*) "கட்டட விதிகள், ஒழுங்குமுறை விதிகள், துணைமுறை விதிகள்'' என்றால் கட்டடங்கள் தொடர்பாக 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம், 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், நேர்விற்கேற்ப 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் ஆகியவற்றின்கீழ் செய்யப்பட்ட விதிகள், ஒழுங்குமுறை விதிகள், துணைமுறை விதிகள் ஆகியன எனப் பொருள்படும்; தமிழ்நாடு சட்டம் IV/1919. தமிழ்நாடு சட்டம் V/1920. தமிழ்நாடு சட்டம் 21/1994.

(*b*) "சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடம்'' என்றால், 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊரமைப்புச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் (23–a) எனும் கூறின்கீழ் குறித்துரைக்கப்பட்ட சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடம் எனப் பொருள்படும்; தமிழ்நாடு சட்டம் 35/1972.

(*c*) "விரிவான மேம்பாட்டுத் திட்டம்'' என்றால், சென்னைப் பெருநகர திட்டப்பரப்பிடத்தின்கீழ் உள்ளடங்குகிற பரப்பிடம் எதனையும் பொறுத்த அளவில் 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் ஏற்பளிக்கப்பட்ட விரிவான மேம்பாட்டுத் திட்டம் ஒன்று எனப் பொருள்படும்; தமிழ்நாடு சட்டம் 35/1972.

(*d*) "மேம்பாட்டு கட்டுப்பாட்டு விதிகள்'' என்றால், சென்னைப் பெருநகரப் பரப்பிடத்திற்கான மேம்பாட்டு கட்டுப்பாட்டு விதிகள் எனப் பொருள்படும்;

(*e*) "அரசு'' என்றால் மாநில அரசு எனப் பொருள்படும்;

(*f*) "உள்ளாட்சி அதிகார அமைப்பு'' என்றால், தமது அதிகார வரம்புகளின்கீழ் உள்ள பரப்பிடங்களைப் பொறுத்த அளவில் சட்டப்படியான கட்டுப்பாட்டினைச் செலுத்துவதற்கு உரிமைத் தகுதியுள்ளவாறு, 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சென்னை மாநகராட்சி அல்லது 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட (சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்குள்ளாக அமைந்த) நகராட்சிகள் அல்லது பேரூராட்சிகள் அல்லது 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட (சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்குள்ளாக அமைந்த) ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது சிற்றூராட்சிகள் அல்லது 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் எனப் பொருள்படும்; தமிழ்நாடு சட்டம் IV/1919. தமிழ்நாடு சட்டம் V/1920. தமிழ்நாடு சட்டம் 21/1994. தமிழ்நாடு சட்டம் 35/1972.

(*g*) "பெரும் திட்டம்'' என்றால் 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்கான பெரும் திட்டம் எனப் பொருள்படும்; தமிழ்நாடு சட்டம் 35/1972.

(*h*) "பொதுத் தெரு'' என்றால், 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊரமைப்புச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் (37)ஆம் கூறில் பொருள் வரையறை செய்யப்பட்டவாறான பொதுத் தெரு எனப் பொருள்படும்; தமிழ்நாடு சட்டம் 35/1972.

(*i*) "தண்டனை நடவடிக்கை'' என்றால், நீதிமன்ற ஆணைகளைத் தொடர்ந்து அல்லது பிறவாறு செய்யப்படும் கட்டட இடிப்பு உள்ளடங்கலாக அதிகாரமற்ற மேம்பாட்டுக்கு எதிராக, தொடர்புள்ள சட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்குள்ளாக உள்ளாட்சி அதிகார அமைப்பினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை எனப் பொருள்படும்;

(*j*) தொடர்பான சட்டம் என்றால்–

(i) சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நேர்வில், 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊரமைப்புச் சட்டம் எனவும்; தமிழ்நாடு சட்டம் 35/1972

(ii) சென்னை மாநகராட்சியின் நேர்வில், 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் எனவும்; தமிழ்நாடு சட்டம் IV/1919

(iii) நகராட்சிகளையும் பேரூராட்சிகளையும் பொறுத்த நேர்வில், 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் எனவும்; தமிழ்நாடு சட்டம் V/1920.

(iv) ஊராட்சி ஒன்றியங்களையும், சிற்றூராட்சிகளையும் பொறுத்த நேர்வில், 1994–ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் எனவும்; பொருள்படும். தமிழ்நாடு சட்டம் 21/1994.

(k) அதிகாரமற்ற மேம்பாடு என்றால்,—

(i) திட்ட அனுமதி அல்லது கட்டட அனுமதி எதிலிருந்தும் மீறிய வகையில்; அல்லது

(ii) திட்ட அனுமதி அல்லது கட்டட அனுமதி எதையும் பெறாமல்; அல்லது

(iii) பெரும் திட்டத்தின்படி அல்லது ஏற்பளிக்கப்பட்ட விரிவான வளர்ச்சித் திட்டத்தின்படி வகைப்படுத்தப்பட்ட நிலப் பயன்பாட்டிற்கு மீறிய வகையில்; அல்லது

(iv) சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்கான மேம்பாடுக் கட்டுப்பாட்டு விதிகளை மீறிய வகையிலும் சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்குள்ளாக இருக்கின்ற பரப்பிடங்களுக்குப் பொருந்தக்கூடிய கட்டட விதிகள், ஒழுங்குமுறை விதிகள், துணைமுறை விதிகள் ஆகியவற்றை மீறிய வகையிலும் பயன்படுத்தப்பட்ட நிலம் எதுவுமோ அல்லது கட்டடம் எதுவுமோ அல்லது மேற்கொள்ளப்படும் கட்டடம் எதனையும் கட்டுவது எனப்பொருள்படும்;

மற்றும் அது பொதுத் தெருக்களிலுள்ள கூவி விற்பவர்களாலும் அத்தெருக்களில் விற்பனை செய்பவர்களாலும் மற்றும் குடிசைப் பகுதிகளில் உள்ள மக்களாலும் செய்யப்படும் அதிகாரமற்ற கையுடைமையையும் உள்ளடக்கும்;

தமிழ்நாடு சட்டம் 35/1972.
தமிழ்நாடு சட்டம் IV/1919.
தமிழ்நாடு சட்டம் V/1920
தமிழ்நாடு சட்டம் 21/1994.

(2) இதில் பயன்படுத்தப்பட்டுள்ள, ஆனால் பொருள் வரையறை செய்யப்படாத சொற்களும், சொற்றொடர்களும் அவற்றுக்கு முறையே 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊரமைப்புச் சட்டத்திலும், 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திலும், 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திலும், 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலும் குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களையே கொண்டிருக்கும்.

**நெறிமுறைகள், கொள்கை வழிகாட்டு நெறிமுறைகள் முதலானவற்றை அரசு முடிவு செய்தல்.**

**3.** (1) தொடர்பான சட்டம் எதிலுமோ அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள், ஒழுங்குமுறை விதிகள் அல்லது துணைமுறை விதிகள் எவற்றிலுமோ என்ன அடங்கியிருந்தபோதிலும், அரசானது இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து ஓராண்டுக் கால அளவிற்குள்ளாக, சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்தின் மேம்பாடுகள் தொடர்ந்து திட்டமிட்டமுறையில் நடைபெறும் வகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு அதிகாரமற்ற மேம்பாடுகளினால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக நெறிமுறைகள், கொள்கை வழிகாட்டு நெறிமுறைகள் இயலக்கூடிய ஆயத்தவியூக ஏற்பாடுகள் ஆகியவற்றை முடிவு செய்வதற்குச் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து இயலக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும். அதாவது.—

(*a*) பெரும் திட்டம், விரிவான மேம்பாட்டுத் திட்டங்கள் அல்லது திட்ட அனுமதி எதற்கும் இணங்கிய வகையில் அல்லாது பயன்படுத்தப்படும் நிலம்;

(*b*) திட்ட அனுமதியை அல்லது கட்டட அனுமதியை மீறிய வகையில் அல்லது அதன் எல்லைகளுக்கு அப்பால் செய்யப்படும் கட்டுமானம்;

(*c*) திட்ட அனுமதி அல்லது கட்டட அனுமதி இல்லாமல் செய்யப்படும் மேம்பாடு;

(*d*) பொதுத் தெருக்களில் கூவி விற்பவர்கள், சாலை வணிகர்கள், குடிசைப் பகுதியில் உள்ள மக்கள் ஆகியோரால் செய்யப்படும் அதிகாரமற்ற கையுடைமை;

(2) (1)–ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள வகைமுறைகளுக்கு உட்பட்டு, மற்றும் நீதிமன்றம் எதனின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று இருந்தவாறான நிலை, (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகாரமற்ற மேம்பாட்டு வகைகளைப் பொறுத்த அளவில் பேணி வரப்படுதல் வேண்டும்.

(3) 2007–ஆம் ஆண்டு ஜூலை 27–ஆம் நாளுக்கு முன்னதாக (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகாரமற்ற மேம்பாட்டு வகைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தொடங்குவதற்கு, தொடர்பான சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது அதிகார அமைப்பு எதனாலும் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மற்றும் மேற்சொன்ன ஓராண்டு கால அளவின்போது தண்டனை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் கூடாது.

(4) இந்த சட்டத்தில் அடங்கியுள்ள பிற வகைமுறை எதுவும் என்னவாக இருந்தபோதிலும் அரசானது எந்த நேரத்திலும் அந்த ஓராண்டு முடிவடைவதற்கு முன்பாக (1)—ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகாரமற்ற மேம்பாட்டு வகைப்பாடுகளைப் பொறுத்த அளவில் *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் அறிக்கையின் மூலமாக (2)—ஆம் உட்பிரிவிலோ அல்லது நேர்விற்கேற்ப (3)—ஆம் உட்பிரிவிலோ கொடுக்கப்பட்ட சலுகையை மீளப் பெறலாம்.

**இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் ஒரு சில நேர்வுகளில் பொருந்தாது எனல்.**

**4.** இந்தச் சட்டத்தின் செயற்பாட்டுக் கால அளவின்போது பின்வரும் அதிகாரமற்ற மேம்பாடு வகைப்பாடுகளைப் பொறுத்த அளவில் 3—ஆம் பிரிவின்கீழ் தீர்வழி எதுவும் வழங்கப்படுதல் கூடாது.—

(*a*) 2007—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27—ஆம் நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்கப்பட்ட அல்லது தொடரப்பட்ட அதிகாரமற்ற மேம்பாடு எதுவும்;

(*b*) பெரும் திட்டம் அல்லது விரிவான மேம்பாட்டுத் திட்டத்தின் வகைமுறைகளை மீறிய வகையில் அல்லது 2007—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27—ஆம் நாளன்றோ அல்லது அதற்கு பின்னரோ சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்தில் எவ்விடத்திலும் செயற்பாடு எதனையும் தொடங்குதல்;

(*c*) 3 ஆம் பிரிவின் (1)—ஆம் உட்பிரிவின் (d) கூறின்கீழ் வரும் அத்தகைய நேர்வுகள் நீங்கலாக, பொதுத் தெருக்களில் செய்யப்படும் அதிகாரமற்ற கையுடைமை; மற்றும்

(*d*) பொதுத் திட்டம் எதற்காகவும் தேவைப்படும் நிலத்தைப் பெறுவதற்காக அரசின் கொள்கைகளுக்கு இணங்கிய வகையில் குடிசைப் பகுதி மக்களை, கூவி விற்பவர்களை மற்றும் தெருக்களில் விற்பனை செய்பவர்களை அகற்றுதல்.

**இந்தச் சட்டம் பிற சட்டங்களுக்கு மேலோங்கி நிற்றல்.**

**5.** இந்த சட்டத்தின் வகைமுறைகள் அப்போதைக்கு நடைமுறையில் உள்ள இம்மாநிலச் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட பிற சட்டம் எதிலும் அதற்கு முரணாக என்ன அடங்கியிருந்தபோதிலும் செயல்விளைவு கொள்ளுதல் வேண்டும்.

**பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரம்.**

**6.** அரசானது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக, தொடர்பான சட்டம் எதனின்கீழும் அமைந்த உள்ளாட்சி அதிகார அமைப்பு எதற்குமோ அல்லது பிற அதிகார அமைப்பு எதற்குமோ தாம் தக்கதெனக் கருதக்கூடிய அத்தகைய பணிப்புரைகளை அவ்வப்போது பிறப்பிக்கலாம், மற்றும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடப்பது அத்தகைய உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது பிற அதிகார அமைப்பின் கடமையாக இருத்தல் வேண்டும்.

**நீக்கமும் காப்பும்.**

**7.** (1) 2009—ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. **தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2009.**

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ அல்லது கொடுக்கப்பட்ட பணிப்புரை எதுவுமோ, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ எடுக்கப்பட்டுள்ளதாகவோ அல்லது கொடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்டம் எண் 8/2010**

*தமிழ்நாடு மாநிலத்தில் சமச்சீர் பள்ளிக் கல்வி முறைக்கு வகை செய்வதற்காகவும் அதனோடு தொடர்புடைய மற்றும் அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்குமானதொரு சட்டம்.*

இம்மாநிலத்தில், மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் நான்கு வகையான பள்ளிக் கல்வி முறைகள் தற்போது இருந்து வருகின்றன. அவை, மாநில வாரியப் பள்ளிகள், மெட்ரிக்குலேசன் பள்ளிகள், ஓரியண்டல் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் ஆகியனவாகும். இந்தப் பள்ளிகள் தனிப்பட்ட பாடத்திட்டங்களையும், பாட நூல்களையும், தேர்வுத்திட்டங்களையும் கொண்டிருக்கின்றன. மேலும், அவை வேறுபட்ட வாரியங்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. அதன் விளைவாக இந்தப் பள்ளிகளில் உள்ள கல்வியின் தரமானது சமச்சீரான முறையில் இல்லை என்பதாலும்;

சமூக நீதியை உறுதி செய்து இம்மாநிலத்திலுள்ள பள்ளிகளில் தரமான கல்வியை வழங்குவதற்கு இம்மாநிலத்திலுள்ள பள்ளிக்கல்வியைப் பொறுத்த அளவில் சமச்சீரான முறையை உருவாக்குவது இன்றியமையாததாக இருக்கிறது என அரசு கருதுகிறது என்பதாலும்;

அரசானது, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு. முத்துக்குமரன் அவர்கள் தலைமையில், சமச்சீர் பள்ளிக்கல்வி முறையை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆய்வு செய்வதற்காக குழு ஒன்றை அமைத்துருவாக்கியது. மேற்சொன்ன குழுவானது, அனைத்துப் பிரச்சனைகளையும் ஆய்வு செய்து தனது பரிந்துரைகளை அரசுக்குப் பணிந்தனுப்பியது என்பதாலும்;

திரு. முத்துக்குமரன் குழுவின் பரிந்துரைகளைக் கவனிப்பதற்காக திரு. M.P. விஜயகுமார், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களைக் கொண்ட ஒரு நபர் குழு ஒன்று அமைத்துருவாக்கப்பட்டது என்பதாலும்;

மேற்சொன்ன ஒரு நபர் குழுவானது, திரு. முத்துக்குமரன் குழுவின் பரிந்துரைகளைக் கவனித்து ஆய்ந்து, தனது பரிந்துரைகளை அரசுக்கு பணிந்தனுப்பியது என்பதாலும்;

திரு. M.P. விஜயகுமார், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் தலைமையில் கல்வியாளர்களைக் கொண்ட குழு ஒன்று கேரளா, கர்நாடகா, குஜராத், மஹாராஷ்ட்ரா ஆகிய மாநிலங்களுக்கு விஜயம் செய்து அம்மாநிலங்களில் இருந்து வரும் கல்வி முறையை ஆய்வு செய்தது. மேற்சொன்ன கல்வியாளர்கள் குழுவானது, பள்ளிக் கல்வித்துறை மற்றும் கல்வி வாரியங்களில் நிருவாக அமைப்பு முறை குறித்தும் அந்த மாநிலங்களில் ஏற்கப்பட்டு பின்பற்றப்படும் தேர்வுமுறைகள் மதிப்பீட்டு முறைகள் ஆகியன குறித்தும் தனது அறிக்கையை பணிந்து அனுப்பியது என்பதாலும்;

அரசானது, பெரும் ஆழ்ந்த ஆராய்வுகளுக்குப் பின்னர் இம்மாநிலத்திலுள்ள மெட்ரிக்குலேசன் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள், ஓரியண்டல் பள்ளிகள் ஆகியன உள்ளடங்கலான அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியன பொதுவான பாடத்திட்டம், பாடநூல்கள், தேர்வு முறை ஆகியவற்றைப் பெற்றிருப்பது சமூக நீதியை உறுதி செய்வதுடன் தரமான கல்வியை வழங்கும் என்பதான கருத்தினை ஏற்றுக் கொண்டது என்பதாலும்; அதற்கிணங்கிய வகையில், அரசானது, இம்மாநிலத்தில் சமச்சீர் பள்ளிக் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதென முடிவு செய்துள்ளது;

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2009–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,–

(a) "கல்வி ஆண்டு" என்றால், ஜூன் முதல் நாளன்று தொடங்குகிற ஆண்டு எனப்பொருள்படும்;

(b) "ஆங்கிலோ–இந்தியன் பள்ளி" என்றால், ஆங்கிலோ–இந்தியன் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறை விதித் தொகுப்பின்கீழ் அவ்வாறு ஏற்பளிக்கப்பட்ட பள்ளி ஒன்று எனப்பொருள்படும்;

(c) "வாரியம்" என்றால், 5–ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட மாநில பொதுப் பள்ளிக் கல்வி வாரியம் எனப்பொருள்படும்;

(d) "தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு" என்றால், அரசினால் அறிவிக்கையின் வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பரப்பிடத்திற்கான அல்லது அத்தகைய

வகையான தனியார் பள்ளி தொடர்பான தகுதி வாய்ந்த அதிகார அமைப்பின் அலுவல்களை ஆற்றுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகார அமைப்பு எதுவுமோ, அலுவலர் எவருமோ அல்லது நபர் எவருமோ எனப்பொருள்படும்;

(e) "அரசு" என்றால், மாநில அரசு எனப் பொருள்படும்;

(f) "மெட்ரிக்குலேசன் பள்ளி" என்றால், மெட்ரிக்குலேசன் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறை விதித் தொகுப்பின்கீழ் அவ்வாறு ஏற்பளிக்கப்பட்ட பள்ளி ஒன்று எனப்பொருள்படும்;

(g) "ஓரியண்டல் பள்ளி" என்றால், பள்ளிக் கல்வி இயக்குநரால் அவ்வாறு ஏற்பளிக்கப்பட்ட பள்ளி ஒன்று எனப் பொருள்படும்;

(h) "வகுத்துரைக்கப்பட்டது" என்றால், விதிகளின்படி வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

(i) "பள்ளி" என்றால்,—

(i) அரசினால் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனாலும் பேணிவரப்படும் தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப்பள்ளி எனப்பொருள்படும்; அல்லது

(ii) அரசு நிதியத்திலிருந்து உதவிப் பெறுவதாயினும் அல்லவாயினும், அரசமைப்பின் 30–ஆம் உறுப்பின் (I)-ஆம் கூறின்கீழ் அமைக்கப்பட்டு நிருவகிக்கப்படுகிற சிறுபான்மையினர் பள்ளி உள்ளடங்கலான தனியார் கல்வி முகவாண்மை எதனாலும் அமைக்கப்படுகிற மற்றும் நிர்வகிக்கப்படுகிற அல்லது பேணிவரப்படுகிற தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளி எதுவும் எனப்பொருள்படும்; அல்லது

(iii) அரசு நிதியத்தில் இருந்து உதவிப் பெறுவதாயினும் அல்லவாயினும், அரசமைப்பின் 30–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறின்கீழ் அமைக்கப்பட்டு நிருவாகிக்கப்படுகிற சிறுபான்மையினர் பள்ளி உள்ளடங்கலான மெட்ரிக்குலேசன் பள்ளி, ஆங்கிலோ–இந்தியன் பள்ளி அல்லது ஓரியண்டல் பள்ளி எனப்பொருள்படும்; ஆனால், அது இடைநிலைக்கல்வி மைய வாரியத்துடன் இணைக்கப்பட்ட பள்ளி ஒன்றை உள்ளடக்காது.

**விளக்கம்.–** இந்தக் கூறின் நோக்கத்திற்காக,—

**(1)** "உள்ளாட்சி அதிகார அமைப்பு" என்றால்—

(i) சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி மாநகராட்சிகள் அல்லது அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் எதனின்படியும் அமைத்துருவாக்கப்படக்கூடிய பிற மாநகராட்சி எதுவும்; அல்லது

(ii) **1920**–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு நகராட்சி மன்றம்; அல்லது தமிழ்நாடு சட்டம் V/1920

(iii) **1994**–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது ஒரு கிராம ஊராட்சி; தமிழ்நாடு சட்டம் 21/1994

எனப் பொருள்படும்

**(2)** (i) தொடக்கப்பள்ளியானது, I முதல் V வரையிலான வகுப்புகளைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்;

(ii) நடுநிலைப்பள்ளியானது, I முதல் VIII வரையிலான வகுப்புகளை அல்லது VI முதல் VIII வரையிலான வகுப்புகளைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்;

(iii) உயர்நிலைப் பள்ளியானது, I முதல் X வரையிலான வகுப்புகளை அல்லது VI முதல் X வரையிலான வகுப்புகளை அல்லது IX மற்றும் X என்பதான வகுப்புகளைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்.

(iv) மேல்நிலைப் பள்ளியானது, I முதல் XII வரையிலான வகுப்புகளை அல்லது VI முதல் XII வரையிலான வகுப்புகளை அல்லது XI மற்றும் XII என்பதான வகுப்புகளைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்.

(j) "மாநிலம்" என்றால், தமிழ்நாடு மாநிலம் எனப்பொருள்படும்,

பள்ளிகள் பொதுவான பாடத்திட்டத்தையும் பாடநூலையும் பின்பற்றுதல் வேண்டும் எனல்.

**3. (1)** இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பள்ளியும்:—

(a) I மற்றும் VI என்பதான வகுப்புகளில் **2010–2011**–ஆம் கல்வி ஆண்டிலிருந்து தொடங்கியும்;

(b) II முதல் V வரையிலான வகுப்புகளிலும் V11 முதல் X வரையிலான வகுப்புகளிலும் 2011–2012–ஆம் கல்வி ஆண்டிலிருந்தும்;

ஒவ்வொரு பாடத்திற்கும் வாரியத்தினால் குறித்துரைக்கப்படக்கூடிய பொதுவான பாடத்திட்டத்தையும் பாட நூல்களையும் பின்பற்றுதல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவின் வகை முறைகளுக்குட்பட்டு இம்மாநிலத்திலுள்ள பள்ளி ஒவ்வொன்றும்,—

(a) ஒவ்வொரு பாடத்திலும் கற்பிப்பதற்கு வாரியத்தினால் அறுதி செய்யப்பட்டவாறான நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(b) தேர்வினை நடத்துவதற்கு வாரியத்தினால் குறித்துரைக்கப்படக்கூடிய நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

4. மொழிப்பாடங்கள் நீங்கலான பிற அனைத்துப் பாடங்களும் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ அல்லது பிற மொழிகள் எவற்றிலுமே தகுதி வாய்ந்த அதிகார அமைப்பின் ஏற்பளிப்புடன் பள்ளி ஒன்றினால் முடிவு செய்யப்படக்கூடியவாறு கற்பிக்கப்படலாம். பயிற்றுமொழி.

5. (1) அரசானது, அறிவிக்கையின் மூலம், இம்மாநிலத்தில் சமச்சீர் பள்ளிக் கல்வியை வழங்குவது என்பதான அரசின் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக மாநிலப் பொதுப்பள்ளிக் கல்வி வாரியம் என அழைக்கப்படும் வாரியம் ஒன்றை அமைத்துருவாக்குதல் வேண்டும். அந்த வாரியமானது, இந்தச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதோடு அதற்குக் குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றுதலும் வேண்டும். வாரியத்தை அமைத்துரு வாக்குதல்.

(2) வாரியமானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது:–

**பதவி–வழி உறுப்பினர்கள்**

(a) பள்ளிக் கல்வி இயக்குநர், அவர் தலைமையாளராக இருத்தல் வேண்டும்;

(b) அரசுக் கூடுதல் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை;

(c) அரசுத் தேர்வுகள் இயக்குநர்;

(d) மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநர்;

(e) தொடக்கக் கல்வி இயக்குநர்;

(f) இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி;

(g) பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (இடைநிலைக் கல்வி); அவர் உறுப்பினர்–செயலராக இருத்தல் வேண்டும்.

**பிற உறுப்பினர்கள்**

(a) கல்வி வல்லுனர்கள் மற்றும் புகழ் வாய்ந்த கல்வியாளர்களுக்கிடையே இருந்து அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள்;

(b) மெட்ரிக்குலேசன் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கிடையே இருந்து அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர்;

(c) ஓரியண்டல் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கிடையே இருந்து அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர்;

(d) ஆங்கிலோ–இந்தியன் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கிடையே இருந்து அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர்;

(3) வாரியத்தின் தலைமையகமானது, சென்னையில் அமைந்திருத்தல் வேண்டும்.

(4) வாரியமானது, தேவைப்படக்கூடியவாறு அடிக்கடி அத்தகைய நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும்; மற்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறை விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், வாரியமானது, ஓர் ஆண்டில் குறைந்தது இருமுறையாவது கூடுதல் வேண்டும்

(5) தலைமையாளர், வாரியத்தின் கூட்டத்திற்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

(6) வாரியத்தில் காலியிடம் எதுவும் இருக்கிறது அல்லது வாரியத்தை அமைத்துருவாக்கியதில் குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்தினால் மட்டுமே வாரியத்தின் செயல்பாடு அல்லது நடவடிக்கையானது செல்லாததாக இருத்தல் கூடாது.

வாரியத்தில் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் வரையறைகளும் நிபந்தனைகளும்.

**6. (1)** பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மூன்று ஆண்டு கால அளவிற்குப் பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் மேலுமொரு மூன்றாண்டுக் கால அளவிற்கு மீண்டும் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவர் ஆவார்:

**வரம்புரை:** ஆனால், இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, தற்செயல் காலியிடம் ஒன்றில் ஓர் ஆண்டுக்கு குறையாத ஒரு கால அளவிற்கு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராக பதவி வகித்த நபர் ஒருவர், அப்பதவியின் முழுமையான கால அளவான மூன்றாண்டு கால அளவிற்கு பதவி வகித்துள்ளவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், தன்கைப்பட எழுத்து வாயிலாக அரசுக்கு முகவரியிட்டுத் தெரிவிப்பதன் வாயிலாக தனது பதவியிலிருந்து விலகலாம்; ஆனால் அவர்தம் பதவி விலகலானது அரசினால் ஏற்றுக்கொள்ளப்படும் வரையில் அவர் பதவியில் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

(3) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், முதல் நிலைக்குழுவிற்குப் பொருந்தக்கூடிய அத்தகைய வீதத்திலான அமர்வுக் கட்டணத்தையும் பயணப்படியையும் பெறுவதற்குத் தகுதியுடையவர் ஆவர்.

மன்ற உறுப்பினரைப் பதவியிலிருந்து நீக்குதல்.

7. பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், தம்மைப் பதவியிலிருந்து நீக்குவதைத் தகுந்ததாய் ஆக்குகின்ற அளவிற்குத் தன்னுடைய பதவிக்குத் தான் பொருத்தமற்றவராக வெளிப்படுத்திக் கொள்கின்றார் என்றோ, தவறான நடத்தை அல்லது அசட்டைக் குற்றம் எதையேனும் புரிந்த குற்றவாளியாக இருக்கின்றார் என்றோ, அரசுக்கு எந்தச் சமயத்திலேனும் தோன்றுமானால் அரசு, பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினருக்குக் காரணம் காட்ட கோருகின்ற நியாயமான வாய்ப்பு ஒன்றினைக் கொடுத்த பின்பு, அறிவிக்கையின் வாயிலாகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

தற்செயல் காலியிடத்தை நிரப்புதல்.

8. மரணம், பதவி விலகல், பதவி நீக்கம் என்கின்ற காரணத்தாலோ அல்லது மற்றபடியோ பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பதவியில் தற்செயல் காலியிடம் ஒன்று ஏற்படுமானால், அத்தகைய காலியிடமானது, கூடிய விரைவில் அரசினால் நிரப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர், எவருடைய இடத்தை அவர் நிரப்புகிறாரோ, அவர் எஞ்சிய எவ்வளவு காலத்திற்கு பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராக இருந்திருப்பாரோ அவ்வளவு காலத்திற்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

வாரியத்தின் அதிகாரங்களும் பணிகளும்.

9. இம்மாநிலத்தில், சமச்சீர்ப்பள்ளிக் கல்வி முறையை அமைப்பதை உறுதி செய்வதற்காக வாரியமானது, அதுதக்கதெனக் கருதக் கூடியவாரான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அதன் கடமையாக இருத்தல் வேண்டும். வாரியமானது,—

(a) பள்ளியில் ஒவ்வொரு வகுப்பிற்கும் மற்றும் ஒவ்வொரு படிப்பு பிரிவிற்கும் பொதுவான பாடத்திட்டத்தையும் பாடநூல்களையும் வகுத்துரைத்தல் வேண்டும்;

(b) தேர்வுகளை நடத்துவதற்கான நெறிமுறைகளையும் சான்றிதழ்களை வழங்குவதற்கான குறைந்த அளவுத் தர நிலைகளையும் வகுத்துரைத்தல் வேண்டும்;

(c) பள்ளிக் கல்வியின் தர நிலையை மதிப்பீடு செய்து பள்ளிக்கல்வியை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குதல் வேண்டும்;

(d) அலுவல் எதனையும் பரிசீலனை செய்வதற்காக அது கருதக்கூடிய அத்தகைய எண்ணிக்கையிலான குழுக்களை அமைத்துருவாக்குதல் வேண்டும்;

(e) சமச்சீர் பள்ளிக் கல்வி முறையை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைக்குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல் வேண்டும்;

(f) வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற பணிகளை ஆற்றுதல் வேண்டும்.

குழுக்களை அமைத்துரு வாக்கு வதற்கான அதிகாரம்.

10. (1) வாரியமானது, அலுவல் எதனையும் பரிசீலனை செய்வதற்காக, அது தக்கதென நினைக்கக்கூடிய அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அல்லது குழுக்களை எந்த நேரத்திலும் அமைத்துருவாக்கலாம் அல்லது அதனையே ஒரு குழுவாக மாற்றிக் கொள்ளலாம்.

(2) குழுவானது, வாரியத்தின் தலைமையாளரின் முன் ஏற்பளிப்புடன் கூடுதல் உறுப்பினரை அல்லது உறுப்பினர்களை இசைந்து தெரிவு செய்துக் கொள்வதற்கு அதிகாரங்களைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும்.

(3) குழுவானது, வாரியத்தினால் பணிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளாக வாரியத்திற்குத் தனது அறிக்கையினைப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

**11.** நபர் எவரும், இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளை வேண்டுமென்றே மீறுவாரானால், அவர் இருபத்தைந்தாயிரம் ரூபாய்கள் வரை போகக் கூடிய பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்; அத்தகைய முதலாம் மீறுகைக்காக குற்றவாளி எனத் தண்டிக்கப்பட்டதன் பின்னர், தொடர்ச்சியான மீறுகையின் நேர்வில், அத்தகைய மீறுகை தொடர்கிற ஒவ்வொரு நாளின் போதும் ஓர் ஆயிரம் ரூபாய் வரை போகக்கூடிய கூடுதல் பணத்தண்டம் ஒன்று விதித்தும் தண்டிக்கப்படுதல் வேண்டும். தண்டனைகள்.

**12. (1)** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் எதற்கும் எதிரான குற்றச் செயல் ஒன்று, ஒரு நிறுமத்தால் செய்யப்படுகிறவிடத்து, அந்தக் குற்றச் செயல் செய்யப்பட்ட நேரத்தில் அந்த நிறுமத்தின் அலுவலை நடத்தி வருவதற்குப் பொறுப்பாயிருந்துவரும், பொறுப்பிலிருந்தவருமான நபர் ஒவ்வொருவரும், அதோடு அந்த நிறுமமும் அந்தக் குற்றச் செயலை செய்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மேலும், அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கிணங்கிய வகையில் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்: நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள்.

**வரம்புரை:–** ஆனால், நபர் எவரும், அத்தகைய குற்றச் செயல் தமக்குத் தெரியாமல் செய்யப்பட்டதென்று அல்லது அந்தக் குற்றச் செயல் செய்யப்பட்டதைத் தடுப்பதற்குத் தாம் உரிய முயற்சி அனைத்தையும் எடுத்தார் என்று மெய்ப்பிப்பாராயின், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் தண்டனை எதற்கும் அவரை உள்ளாக்காது.

**(2) (1)**–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், அத்தகைய குற்றச்செயலானது ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டு அந்த நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் இசைவுடனோ அல்லது மறைமுக ஆதரவுடனோ செய்யப்பட்டு இருக்கிறது அல்லது அவர்பாலுள்ள கவனக்குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாயிருக்கிறது என்று மெய்ப்பிக்கப்படுமிடத்து, அந்த இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அந்தக் குற்றச் செயலைச் செய்ததாகக் கொள்ளப்படுதலும் அதற்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்கிணங்க தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

**விளக்கம்:-** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,–

(a) "நிறுமம்" என்பது, கூட்டுக்குழுமம் எதுவும் என்று பொருள்படும். மற்றும் ஒரு பொறுப்புக் கட்டளை, ஒரு நிறுவகம், ஒரு குழுமம் அல்லது தனியாட்களின் பிற கழகம் எதனையும் உள்ளடக்கும்.

(b) "இயக்குநர்" என்றால்,–

(i) ஒரு நிறுவகம் தொடர்பாக, அந்த நிறுவகத்தின் கூட்டாளி ஒருவர் என்று பொருள்படும்.

(ii) ஒரு குழுமம், பொறுப்புக் கட்டளை அல்லது தனியாட்களின் பிற கழகம் தொடர்பாக குழுமம், பொறுப்புக் கட்டளை அல்லது பிற சங்கத்தின் விதிகளின்படி, அந்தக் குழுமம், பொறுப்புக் கட்டளை அல்லது, நேர்விற்கேற்ப, பிற சங்கத்தின் அலுவற்பாடுகளின் மேலாண்மைப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிற நபர் என்று பொருள்படும்.

**13.** நீதிமன்றம் எதுவும், அரசின் அல்லது இதன் பொருட்டு அரசு அதிகாரமளிக்கும் அலுவலரின் ஒப்பளிப்பு இன்றி, இந்தச் சட்டத்தின்படியான குற்றச் செயல் எதனையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகாது. குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.

**14.** (1) வாரியமானது, இந்தச் சட்டத்தின்படியான செயற் பணிகளையும், கடமைகளையும் ஆற்றுவதில், அரசானது, அவ்வப்போது, அதற்கு எழுத்துருவில் கொடுக்கக்கூடிய கொள்கை விளக்க வினாக்களின் பேரிலான அத்தகைய பணிப்புரைகளுக்கு கட்டுப்பட்டதாய் இருத்தல் வேண்டும். அரசின் பணிப் பாணைகள்.

**(2)** வினா ஒன்று ஒரு கொள்கை விளக்கம் குறித்ததா இல்லையா என்பது குறித்ததான அரசின் முடிவு அறுதியானதாக இருத்தல் வேண்டும்.

**15.** இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதனின்படியும் நல்லெண்ணத்தில் செய்த அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும் வாரியத்திற்கு, அரசுக்கு அல்லது அதன் அலுவலர்களுக்கு எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எவையும் எழாமல் போகும். நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**16. (1)** அரசானது, பொது நலனில், ஆணையின் வாயிலாக, அந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்ட நேர்வு எதிலும் விசாரணை ஒன்றைச் செய்யுமாறு வாரியத்தைப் பணிக்கலாம்; மற்றும் வாரியமானது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கால அளவிற்குள்ளாக அதனால் செய்யப்பட்ட விசாரணையின் முடிவினை அரசுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும். பணிப்பாணை வழங்குவதற்கு அரசுக்குள்ள அதிகாரம்.

**(2) (1)**–ஆம் உட்பிரிவின்படி வாரியத்திடமிருந்து அறிக்கை வரப்பெற்றதன் பேரில், அரசானது, அது பொருத்தமென நினைக்கக்கூடியவாறான அத்தகைய பணிப்புரையை வழங்குதல் வேண்டும்; அத்தகைய பணிப்பாணையானது அறுதியானதாகவும் கட்டுப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

17. (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அடுத்தக் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர், அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை ஏதொன்றிலும் மாறுதல் எதையும் சட்டமன்றப் பேரவை செய்யுமாயின், அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுதல் ஆகாது அல்லது பிறப்பிக்கப்படுதல் ஆகாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை, அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்குவருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட செயல் எதனின் செல்லுந்தன்மைக்குக் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

18. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதவையாயிராத வகையில், இந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானவையென்றோ உகந்தவையென்றோ தனக்கு தோன்றுகின்ற அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

**வரம்புரை:** ஆனால், அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதலாகாது.

நீக்கமும் காப்பும்.

19. (1) 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர்பள்ளிக் கல்வி முறை அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2009

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மேற்சொன்ன அவசர சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.